# கரூரில் இந்தி எதிர்ப்புக் கூட்டம்.

## தோழர் அழகர்சாமி வீர முழக்கம்.

(ஒரு நிருபர்)

கரூர், ஜுலை. 6.

இன்று பகல் ஈரோட்டிலிருந்து வந்த தோழர் கே. வி. அழகர்சாமிக்கு மாலையிட்டு வரவேற்றார்கள். பிறகு மாலை 5 மணிக்கு ஓர் பிரம்மாண்டமான இந்தி எதிர்ப்பு ஊர்வலம் ஒன்று கடைவீதி வழியாக சென்று கூட்டம் நடக்கும் இடத்தை அடைந்தது.

மேட்டுப்பாளையம் வித்வான் தோழர் பொன்னுசாமி அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

அதுசமயம் தோழர் அழகர்சாமி அவர்கள் நீண்ட கரகோஷத்தினிடையே எழுந்து காங்கிரஸ் மந்திரி சபையார் இந்தி கட்டாயப் பாடத்தை தமிழர் மீது சுமத்துவது பெரும் அநீதியென்றும், இந்தி நமது நாட்டு மக்களை பார்ப்பனருக்கும் வடநாட்டாருக்கும் அடிமையாக்கும் பொருட்டுக்கொண்டுவரப்படுகிறதென்றும் விளக்கி உணர்ச்சி ததும்ப சுமார் 2 மணி நேரம் பேசினார்.

பிறகு 67 நாட்களாக உண்ணாவிரதமிருக்கும் தோழர் ஸ்டாலின் ஜெகதீசனைப் பாராட்டியும், இந்தியை எதிர்த்து சிறை சென்ற தொண்டர்களைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.